1975 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) 19—3—75 அன்று தெப்பக்காடு யானை வளர்ப்பகத்தில் நடத்தப்பட்ட பொது ஏலத்தில் 1 ஆண்டு முதல் 19 ஆண்டு வயது வரையுள்ள பதினேரு யானைகள் விற்கப்பட்டன. ஏல விற்பனையில் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 1,60,600.

திரு. என். கே. பழனிசாமி: எல்லாப் பொருள்களின் விலையும் ஏறிக் கொண்டே போக யானை விலை மட்டும் குறைந்து கொண்டே போகக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஒவ்வொரு ஆண்டும் விலை கூடுவதாகத்தான் இருக்கிறதே தவிர, விலை குறைவதாகக் கணக்கு இல்லை. பொது ஏலத்தில் விடும்போது, மார்க்கட் ரேட் குறிப்பிட்டு, அதற்கு மேல்தான் விற்க வேண்டுமென்று விலை நிர்ணயிக்கப்படுகிறது.

முதலைப் பண்ணை.

*266 **வினு—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முதலைப் பண்ணை ஒன்று அமைத்திட உத்தேசிக்கப்பட்டு உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) திருச்சி மாவட்டம் திருவரங்கத்திற்கருகே கொள்ளிடக் கரையோரமாக அமைந்துள்ள கிளிக்கூடு கிராமத்தில் உள்ள குட்டையில் முதலைப் பண்ணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: இந்த முதலைகளில் மூன்று வகை முதலைகள், காரியாறு முதலை, உப்பினியாறு, மக்கர் முதலை என்று மூன்று வகை முதலைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதில் எந்த வகை முதலைக்குத் தமிழ்நாட்டில் பண்ணை ஏற்படுத்தப்பட இருக்கிறது? கொள்ளிடம் மேற்கில் முதலைப் பண்ணை அமைக்கப்பட இருக்கிறது என்று கூறியிருக்கிறர்கள். சிதம்பரத்தில் உள்ள கொள்ளிடம் பகுதியில் நிறைய முதலைகள்

இருப்பதாக அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு முதலைப் பண்ணை ஆரம்பிப்பதற்கு அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சிதம்பரத்திற்கு அருகில் வக்கிரமாரி ஏரியில் இருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதையும் எடுக்கலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. நான் முதலைகள், பண முதலைகள் என்று இரண்டு வகைதான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

திரு. கு. காமாட்சி : இந்த முதலைப் பண்ணை காவிரி ஆற்றில் கிளிக்கூடு பக்கத்தில் இருக்கிற இது இயற்கையாக அமைந்த ஒன்று. அங்கு பல முதலைகள் இருக்கின்றன. அந்த முதலை களுக்கு ஒரு பாதுகாப்பு இல்லாததால் சிலநேரங்களில் தப்பி வந்து ஆடுமாடுகளை எல்லாம் அடித்து இழுத்துக் கொண்டு போய் விடுகின்றன. ஆகவே அதற்கு வேலி அமைக்கும் உத்தேசம் இருக்கிறதா? அதற்கும் ஆகாரம் போடும் உத்தேசமும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அந்தக் குட்டையில் 12 பெரிய முதலைகளும் 100 குட்டிகளும் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. வேலி அமைக்கும் முறையெல்லாம் இப்போது எடுக்கிற முயற்சியில் இருக்கிறது. உணவு அளிக்கிற வகையில்- மீன்களும் சிலசமயங்களில் இறைச்சியும் இப்போது அளிக்கப் படுகிறது.

சங்கரன்கோயில் சாலை மராமத்து

*267—வினா திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா, அம்பாசமுத்திரம் யூனியன் பகுதியில், சங்கரன்கோயில் செல்லும் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்ட யூனியன் ரோட்டை செப்பனிட டெண்டர் விடப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?